



**ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்!**

**புவி வெப்பத்தைத் தடுப்போம்!**

**உலகம் அழிந்து போகாமல் காப்போம்!**


# வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

ஐப்பசி - திருவள்ளுவர் ஆண்டு 2040 (அக்டோபர் - 2009) வேர் -1 குரல் - 4




## புவி வெப்பமாவதைத் தடுப்போம்

**பசுமை இல்ல வாயுக்கள் 350**












**"ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்"**
**வேம்பு எனும் மூலிகை மரம்**

**மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கம்**
காரடைக்கன்பட்டி





## நகைச்சுவை

சோமு : டேய் நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்றியா ?
ராமு : சரி கேளு! கேளு!
சோமு : சேவல் பாறையில முட்டை போட்டா உடையுமா? உடையாதா?
ராமு : .....ம்... ம்.... உடைந்து விடும்!
சோமு : சேவல் எங்காவது முட்டை போடுமா ?

**சதீஷ்குமார்,** வயது 13, கவரப்பட்டி

## கவிதை

தூரத்தில் இருப்பது சென்னை
நம் வீட்டில் இருப்பது திண்ணை
தோட்டத்தில் இருப்பது தென்னை
நாங்கள் நினைப்பது உன்னை (குழந்தைகள் இயக்கத்தை)

**மகேந்திரன்** வயது 10, கவரப்பட்டி

தோழமை என்பது நட்புக்காக
பூ என்பது வாசத்துக்காக
வேம்பு என்பது மருந்துக்காக
சுற்றுச்சூழல் என்பது மனிதனின் வாழ்க்கைக்காக

**அ.மணிமேகலை** வயது 13, பாப்பாப்பட்டி.

## விடுகதை

1. வாடா போடா என்று பேசுவான், ஆனால் வாசலை விட்டு வெளியே வரமாட்டான். அவன் யார் ?

**மகேந்திரன்,** வயது 10, கவரப்பட்டி

2. சின்ன மச்சான் கீழே குனிய வைச்சான் அவன் யார் ?

**விஜயலெட்சுமி** வயது 10, கவரப்பட்டி

3. தொங்குறவனுக்கும் துள்ளுறவனுக்கும் ஒரே நாளில் திருமணம் அவுங்க யார் ?

**ஜெயஸ்ரீ** வயது 10, கவரப்பட்டி

4. மண்ணுல இருக்கும் மன்னவனே, உன் மண்டை புட்டு திங்க போறேன் அவன் யார் ?

**சத்யா,** வயது 12, கவரப்பட்டி

5. ஒற்றை கண்ணன் துணியை கண்டால் ஓடி ஆடுவான் அவன் யார் ?
6. விளக்கை சுமந்தபடி வெளிச்சம் போடுகிறான் அவன் யார் ?
7. ஒலியும் ஒளியும் சேர்ந்தே வரும், தொலைக்காட்சி பெட்டி அல்ல, அது என்ன ?

**அ. மணிமேகலை,** வயது 13, பாப்பாப்பட்டி.

1. நாக்கு 2. முள் 3. புளி, மீன் 4. நிலக்கடலை 5. ஊசி 6. மின்மினிப்பூச்சி 7. இடி மின்னல்



மேக்ட் பணிகள் பற்றிய பார்வையில்

# மாலை நேர தனிப்பயிற்சி வகுப்பு

மேக்ட் நிறுவனத்தின் கீழ் முப்பது கிராமங்கள் உள்ளன. அவற்றில் எட்டு கிராமங்களில் மாலை நேர வகுப்பு நடைபெறுகிறது. திருச்சி மாவட்டம் கள்ளிப்பட்டியிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் இராசாளிப்பட்டி, முத்தகவுண்டன்பட்டி, வடக்கு ஆண்டியப்பட்டி, தெற்கு ஆண்டியப்பட்டி, கவரப்பட்டி, செரளப்பட்டி, மேகாட்டான்பட்டி ஆகிய ஊர்களிலும் மாலை நேர வகுப்பு நடைபெறுகிறது. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பணியாளர் கொண்டு மாலை நேர வகுப்பு நடத்தப்படுகிறது. இந்த மாலை நேர வகுப்பு பணியாளர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை பள்ளியில் கொடுக்கும் வீட்டுபாடத்தை சரியாக செய்ய உதவி செய்வார்கள். இந்த பணியாளர்கள் ஞாயிற்று கிழமைகளில் குழந்தைகள் இயக்கம் நடத்துவார்கள். பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிற ஊர்கள் மற்றும் பயிற்சி வகுப்பில் பங்கேற்கும் குழந்தைகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஊர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. கள்ளிபட்டி | 15 | 10 | 25 |
| 2. இராசாளிப்பட்டி | 20 | 10 | 30 |
| 3. முத்துகவுண்டன்பட்டி | 15 | 12 | 27 |
| 4. வடக்கு ஆண்டியப்பட்டி | 10 | 15 | 25 |
| 5. தெற்கு ஆண்டியப்பட்டி | 10 | 5 | 15 |
| 6. மேகாட்டான்பட்டி | 20 | 15 | 35 |
| 7. கவரப்பட்டி | 20 | 15 | 35 |
| 8. செரளப்பட்டி | 15 | 20 | 35 |

**முக்கிய பணிகள் :**

- ✦ **வாரத்தில் 5 நாட்கள் மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணி வரை மாணவர்கள் அவர்களின் வீட்டு பாடங்களை செய்து முடிப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.**
- ✦ **மாணவர்களுக்கு புரியாத பள்ளி பாடங்களை தெளிவாக விளக்கிட வேண்டும்**
- ✦ **புதுக்கோட்டை அல்லது திருச்சி மாவட்டத்தில் மேக்ட் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க குழந்தைகளை அழைத்து வர வேண்டும்.**
- ✦ **சனி கிழமைகளில் குழந்தைகளுக்கு குழு விளையாட்டுகளும், அவர்களின் கல்வி ரீதியான செயல்பாடுகளை பற்றியும் சொல்லி கொடுப்பார்கள்.**
- ✦ **மாலை நேர வகுப்பிலும் குழந்தைகள் இயக்கத்திலும், குழந்தைகளின் வருகையை பதிவு செய்திட உதவுவார்கள்.**

**கு. பிரேமா,** புத்தக தேவதை, மேக்ட்.



**வேர்களின் குரல்**
குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

இதழாசிரியர் :
ச. சுபத்ரா
ஆசிரியர் குழு :
அ. அருண்குமார்
கா. இராகவேந்திரன்
ம. முத்துலெட்சுமி
பிரியங்கா
ம. சந்திரகுமார்
இரா. புவனேஸ்வரி
ரமணி
அ.மணிமேகலை
செ.சந்தியா
லோகேஸ்வரி
பொ.கார்த்திகேயன்
ர. சத்யா
ஆ. ஜெயபால்
த. கவியரசன்
நிழற்படம் :
த.முனியேந்திரன்
வடிவமைப்பில் உதவி :
முனைவர். இரா.ஜாக்குலின் மேரி

பொறுப்பாசிரியர் :
**த. சிரில் அலெக்சாண்டர்**

வேர் 1
குரல் 4

(தனி சுற்றுக்கு மட்டும்)

ஐப்பசி மாதம்
திருவள்ளுவர் ஆண்டு 2040
(அக்டோபர் - 2009)

தொடர்புக்கு :
**வேர்களின் குரல்**
மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் (மேக்ட்)
கதவு எண்.8,
பிளாட் எண். 39,
ஸ்டார்லிங் அப்பார்ட்மெண்ட்,
அக்பராபாத் இரண்டாம் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 044 24721579
மின்னஞ்சல் : vergalinkural@gmail.com

## ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த தோழர்களுக்கும், பெரியோர்களுக்கும், தொடர்ந்து ஆதரவு தந்து வரும் அன்பு உள்ளங்களுக்கும் ஆசிரியர் குழு சார்பில் வாழ்த்துக்கள்.

இந்த நான்காம் இதழுடன் எங்களது வேர்களின் குரல் வெற்றிகரமாக முதல் ஆண்டினை நிறைவு செய்திருக்கிறது. இந்த மகிழ்ச்சியில் எங்களால் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. ஏனெனில் ஈழத்தில் தமிழர்கள் தங்களது சொந்த மண்ணிலேயே முள்வேலிகளின் நடுவில் ஆடுமாடுகளைப் போல அடைக்கப்பட்டுள்ளனர். அதில் எம் போன்ற குழந்தைகள் அதிகம் இருக்கின்றனர். அந்த மக்களுக்கு உணவு, உடை, தங்குமிடம், கழிப்பிடம் மருத்துவம், பாதுகாப்பு, குடிநீர் என எதுவும் இல்லாதவர்களாக அனாதைகள் போல வேதனைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். மேலும் பலர் இலங்கை அரசால் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இது போன்ற மனித குலத்திற்கு எதிரான செயல்களை எம் இயக்கம் சார்பில் கண்டிக்கிறோம். மேலும் ஈழத்தமிழர்கள் விரைவில் அவர்கள் சொந்த ஊருக்கு திரும்ப உலக நாடுகள் முயற்சி எடுக்க வேண்டும் என்பதே எங்களின் எதிர்ப்பார்ப்பு.

இந்த இதழை **350** என்ற எண்ணை மையப்படுத்தி வெளியிட்டுள்ளோம். உலகம் வெப்பமடைவதை தடுத்து உலகை பேரழிவிலிருந்து காப்பாற்றும் முயற்சியாக வருகிற டிசம்பர் மாதம் டென்மார்க் நாட்டிலுள்ள கோபன்எகன் நகரில் **350** இன் அவசியத்தை வலியுறுத்தி மாநாடு நடைபெற உள்ளது.

இந்த இதழில் **350** பற்றியும், ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் செயல்பாடு பற்றியும், கிராமசபை பற்றிய பகிர்வு, மேக்ட் பற்றிய பார்வை, நகைச்சுவை, கவிதை, விடுகதைகள் போன்றவையும் வெளியிட்டுள்ளோம். இவற்றை எல்லாம் வாசித்து நிறை குறைகளை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

மீண்டும் அடுத்த இதழில் உங்களை சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடைபெறுவது...




உங்கள்
**ச.சுபத்ரா,**
இதழாசிரியர்,
வயது 15, இராசாளிபட்டி.
மாநில ஒருங்கிணைப்பாளர்,
புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பு, தமிழ்நாடு.


# உலகம் அழிவதை தடுக்க கடைசி வாய்ப்பு

நாம் சூரியனிடமிருந்து பல கோடி மைல் தூரத்தில் வாழ்ந்து வருகிறோம். சூரியனிடமிருந்து வரும் ஒளிக்கதிர்கள் பூமியை வந்தடைந்து பசுமை இல்ல வாயுக்கள் உதவியுடன் வெளியே செல்ல வேண்டும். ஆனால் **பசுமை இல்ல வாயுக்களின்** அடர்த்தி அதிகமாகிவிட்டது. எனவே அவை வெளியே செல்ல முடியாமல் பூமியிலேயே தங்கி விடுகிறது. எனவே பூமி மிகவும் வெப்பமடைகிறது. இதனை தடுக்க அனைவரும் இன்றே செயல்படுவோம். பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு என மண்ணினுள் புதைந்து கிடைக்கும் புதைவடிவ எரிபொருட்களை அதிகமாக பயன்படுத்துவதால் அவற்றிலிருந்து கரியமிலவாயு அதிகமாக வெளியாகிறது. இதனால் பூமியின் வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி அதிகமாவதால் புவியின் வெப்பமும் அதிகரித்து கொண்டே செல்கிறது. கடந்த நூற்றாண்டில் சராசரியாக வெப்பநிலை 0.74 டிகிரி செல்சியஸ் அதிகமாகியுள்ளது.

> பசுமை இல்ல வாயுக்கள் (வளிமண்டலம்) அடர்த்தியினை அளக்க ppm(part per million) என்ற அலகு பயன்படுத்தப்படுகிறது. அதாவது பத்து இலட்சத்தில் ஒரு பகுதி.




உலகம் அழியாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 350 ppm இருக்க வேண்டும்.




பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 450 ppm க்கு மேல் போனால் பூமியில் எல்லா உயிரினமும் அழிந்துவிடும்.



# கிராமசபை கூட்டம்

மேக்ட் வேர்கள் குழந்தைகளாகிய நாங்கள் பங்கேற்பு உரிமைகளுக்கான குழந்தைகள் கூட்டமைப்பு மாநாடு மே.20, 21, 22, ஆகிய மூன்று நாட்கள் மதுரையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் குழந்தைகளுக்கான மாதிரி கிராம மற்றும் நகரசபையை உருவாக்குவோம் என்று முடிவு செய்தோம். அதன் அடிப்படையில் மேக்ட் வேர்கள் குழந்தைகளாகிய நாங்கள் ஆகஸ்ட்டு 15ஆம் நாள் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டு எங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துகொண்டோம்.

## குழந்தைகளுக்கான கிராமசபை ஏன் ?

1. குழந்தைகளின் பிரச்சனைகளை முன்வைக்க ஒரு தளம் உருவாகும்.
2. கிராமசபை மூலம் குழந்தைகளின் கருத்துக்கள் மதிக்கப்படுவதோடு அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
3. குழந்தைகளின் உரிமைகள் பரவலாக்கப்படும். பாதுகாக்கப்படும்.
4. குழந்தைகள் பங்கேற்பை நிலைநாட்ட ஒரு தளம் உருவாகும்.
5. குழந்தைகளுக்காக போடப்படும் திட்டங்களில் குழந்தைகளின் பங்கேற்பை உறுதி செய்திட.
6. குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, வாழ்க்கை தரத்தை மேம்படுத்த.
7. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அடக்கு முறைகளை களைவதற்கு.

## குழந்தைகளுக்கான கிராம சபை எப்படி இருக்க வேண்டும் ?

1. குழந்தைகளுக்கான கிராமசபையின் நாள் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட வேண்டும்.
2. ஒரு வருடத்திற்கு நான்கு முறை குழந்தைகள் கிராமசபை நடக்க வேண்டும்.
3. பெரியவர்களின் கிராமசபை நடைபெறும் நாட்களை தவிர மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெற வேண்டும்.
4. பெரியவர்களின் கிராமசபையில் குழந்தைகளின் கிராமசபை பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும்.
5. குழந்தைகளுக்கான கிராமசபையில் குழந்தைகள் எடுக்கும் தீர்மானங்களை சமூகத்திற்கும், பெரியவர்கள் கிராமசபைக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
6. குழந்தைகள் கிராமசபையை குழந்தைகளே வழி நடத்த வேண்டும்

இந்த கருத்துகள் தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது எங்களுடைய வெற்றியாகும்.

இப்படிக்கு,

**ஆ. ஜெயபாலன்,** மாவட்ட தலைவர்.

வயது 14, கவரப்பட்டி, புதுக்கோட்டை .



## நடைமுறை சிக்கல்களை வெல்வோம் :

இச்செயல்பாடுகளை நடைமுறை படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது. இருந்தாலும் எங்களது மேக்ட் மையத்தின் துணையுடனும் எங்களது பெற்றோர் ஒத்துழைப்புடனும் எங்கள் ஊர் பெரியவர்களின் ஒத்துழைப்புடனும் எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் இயக்கத் தோழர்களின் கூட்டு முயற்சியினால் ஊருக்கு நூறுமரம் வளர்க்கும் செயல்பாடு வெற்றிபெறும்.

## உலகிலேயே முன்மாதிரியான செயல்பாடு :

இதுவரை குழந்தைகளால் செயல்படுத்தப்படும் இம்முயற்சி உலகில் வேறு எங்கும் நடந்தது இல்லை. எங்கள் பகுதியில் மரங்கள் அனைத்தும் வளர்ந்து விட்டால் மேக்ட் வேர்கள் குழந்தை இயக்கத்தின் புகழ் உலகெங்கும் பரவும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

## வேம்பு என்னும் மூலிகைமரம் :

வேப்ப மரம் இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு தன்மை கொண்டது. எனவே ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம் எனும் செயல்பாடு நிறைவடைந்து மரங்கள் எல்லாம் வளர்ந்து எங்கள் கிராமங்கள் நோய் இல்லாத கிராமங்களாக மாற வேண்டும் என்பதே எங்கள் எதிர்ப்பார்ப்பு.

## உலகைக் காப்போம் :

வேப்பமரம் இயற்கையிலேயே மிகவும் குளிர்ச்சியான குணமுடையது. எனவே தான் பூமி சூடாவதை இம்மரங்களின் வளர்ச்சியால் தடுக்க முடியும் என நம்புகிறோம்.

## குழந்தைகள் நலன் :

வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், இந்திய அரசு, தமிழக அரசு உட்பட குழந்தைகளின் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்படாமல் சுற்றுச் சூழலை போட்டிப்போட்டுக் கொண்டு கெடுத்து வருகின்றன. எனவேதான் நாங்களே எங்கள் எதிர்கால தலைமுறையையும் காப்பாற்றும் நோக்கத்தோடு ஊருக்கு நூறுமரம் வளர்க்கும் செயல்பாட்டினை தொடங்கியிருக்கிறோம்.

## பள்ளிகளிலும் மரக்கன்றுகள் :

எங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் ஒத்துழைப்புடன் மரக்கன்றுகள் நடப்பட்டு வளர்க்கப்படுகிறது.

## ஆறு கிராமங்களில் நிறைவு :

இதுவரை கீழ்கண்ட ஆறு கிராமங்களில் மரக்கன்றுகள் நட்டுமுடிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

**1. காரடைக்கன்பட்டி** **2. பூசாரிப்பட்டி**
**3. மேகாட்டான்பட்டி** **4. முத்தக்கவுண்டன்பட்டி**
**5. கோட்டைக்காரன்பட்டி** **6. கவரப்பட்டி.**

**பிரியா,** வயது 14, இராசாளிப்பட்டி.

> **மரம் மனிதகுலத்தின் வாழ்வாதாரம்,**
> **இன்று நீ வளர்த்தால் நாளை உன்னை காக்கும்.**



## புவி வெப்பமடைவதனால் ஏற்படும் விளைவு

- ★ **வெப்பநிலை உயர்வதால் புதிய புதிய நோய்கள் உருவாகின்றன.**
- ★ **துருவப்பகுதிகளில் பனிப்பாறைகள் உருகுவதால் கடல் நீர் மட்டம் உயர்ந்து உலகம் அழிந்து விடும் அபாயம் உள்ளது.**
- ★ **நீர்நிலைகள் வற்றுகின்றன.**
- ★ **புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.**
- ★ **மழை பெய்யும் மாதங்களில் வறட்சி போன்ற காரணங்களினால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் விவசாயமும் பாதிக்கப்படுகிறது, அதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.**

இதனைத் தடுக்க வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் **389** அளவாக உயர்ந்துள்ள அடர்த்தியை **350** ஆக குறைத்து புவி வெப்பமடைவதை சமாளிப்பதே சிறந்த முடிவாகும். இவ்வாறு குறைக்க வேண்டுமெனில் அதற்கு நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றை பயன்படுத்துவதை பெருமளவு குறைக்க வேண்டும். ஒருவேளை கரியமிலவாயு தொடர்ந்து வளிமண்டலத்தில் கலப்பதை கட்டுப்படுத்த தவறினால் உலகம் பேரழிவைச் சந்திக்கும் அபாயம் ஏற்படும்.

புவி வெப்பமடைவதைத் தடுப்பது குறித்து உலக நாடுகளுக்கு இடையேயான கால நிலை குறித்த பேச்சுவார்த்தை ஐ.நா சபை மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகள் பேச்சுவார்த்தையில் உடன்பட மறுக்கின்றன. இதற்கான உலக மாநாடு 07.12.2009 முதல் 18.12.2009 வரை டென்மார்க் நாட்டின் கோபன்எகன் நகரில் நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில் நல்லதொரு உடன்பாடு காணமுடியாது போனால், அதன் விளைவாக இந்த உலகமே அழிந்துபோகும் நிலை ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இது வெறும் எழுத்துகள் மட்டும் அல்ல. இது அறிவியல் உண்மை.

**'இன்றே செயல்படுவோம் புவி வெப்பமடைவதை தடுத்து உலகத்தை காப்போம்'.**

**அ. அருண்குமார்,** வயது 15,

மாவட்ட பொருளாளர், மேகாட்டான்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்.

> உலகம் வெப்பமடைவதற்கு காரணமான வளர்ந்த நாடுகள் ஒப்பந்தத்திற்கு உடன்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி உலகம் எங்கும் ஒரே நாளில் பரப்புரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
>
> **மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பின் பரப்புரை**
>
> நாள் : **24.10.2009** நேரம் : காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
>
> இடம் : **திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை பேருந்து நிலையம், சென்னையில் சில முக்கிய இடங்களில்.**

# ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்

**அவசியம்**

புவி வெப்பமடைவதைத் தடுக்கவும், சுற்றுச்சூழலைக் காக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை காக்கவும், வேலிக்கருவை மரத்தின் தீமைகளிலிருந்து மக்களைக் காக்கவும் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கமும், மேக்ட் மையமும் பல மாதங்கள் திட்டமிட்டு ஊருக்கு நூறுமரம் வளர்ப்போம் எனும் செயல் திட்டத்தை உருவாக்கி உள்ளனர்.

**சிறப்பம்சம் :**

* **வேம்பு எனும் மூலிகை மரத்தை குழந்தைகளே நட்டு வளர்ப்பது.**
* **குழந்தைகள் தங்கள் வீட்டிற்கு அருகிலேயே பாதுகாப்புடன் வளர்ப்பது.**
* **மரத்தையும் அந்த மரத்தினை வளர்க்கும் குழந்தையையும் ஒவ்வொரு நிலையிலும் ஆவணப்படுத்துவது.**

**சண்முகத்தின் மரம் :**

கடந்த 2004 ஆண்டு மே மாதம் சுற்றுச்சூழலுக்கான முகாம் நடந்தது. முகாமின் இறுதிநாளில் பங்கேற்பாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு மரக்கன்று வழங்கப்பட்டது. அம்மரக்கன்றுகளை பெற்ற மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க உறுப்பினர்களில் ஒருவரான சண்முகம் தான் வசிக்கும் பகுதியில் தான் பெற்ற மரக்கன்றை நட்டார். இன்று அது பெரிய மரமாக வளர்ந்துள்ளது. இதுவே ஊருக்கு நூறுமரம் வளர்ப்போம் எனும் செயல்பாடு தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.

**தொடக்கம் :**

முன்னாள் நடுவண் அமைச்சர் திரு. இரகுபதி அவர்களால் ஊருக்கு நூறுமரம் வளர்ப்போம் எனும் செயல்பாடு 13.01. 2008 அன்று நடைபெற்ற பொங்கல் விழாவின் போது தொடங்கப்பட்டது.



**மரக்கன்றுகள் :**

தரமான வேப்பமர விதைகளை தேர்ந்தெடுத்து, அதை விதைத்து மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது. நன்றாக வளர்ந்துள்ள மரக்கன்றுகள் மட்டும் நடுவதற்கு தயாராகிறது.



**குழந்தைகள் :**

குழந்தைகளின் விருப்பத்திற்கேற்பவும் தேவைக்கேற்ப யார் யார் மரக்கன்றுகளை நடுகிறார்களோ அவர்கள் கேட்கும் எண்ணிக்கை முடிவு செய்யப்படுகிறது.


**குழிகள் :**

மரக்கன்று ஊன்றும் இடத்தையும் குழந்தைகளே தேர்வு செய்கின்றனர். தேர்வு செய்யப்பட்ட இடங்களில் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் உதவியுடன் குழிகள் வெட்டப்படுகின்றன.

குழியின் நீளம் : 1.5 அடி

குழியின் அகலம் : 1.5 அடி

குழியின் ஆழம் : 1.5 அடி




**குழியின் அளவு**

**ஊரின் வரைபடம் :**

ஏற்கனவே தலைமைத்துவப் பயிற்சி முகாமில் குழந்தைகளால் வரையப்பட்ட ஊரின் வரைபடத்தை எங்கள் அண்ணனும் பொறியாளருமான திரு. ஆனந்த் அவர்கள் மேக்ட் பணியாளர்கள் துணையுடன் மீண்டும் வரைபடங்கள் சரிபார்க்கப்பட்டு கணிணியில் ஆவணப்படுத்தப்படுகிறது. (படங்கள் : 2ஆம் பக்கத்தில்)

**மரக்கன்று நடுதல் :**

குறிப்பிட்ட நாளில் ஏற்கனவே வெட்டப்பட்ட குழிகளில் குழந்தைகள் மேக்ட் பணியாளர் துணையுடன் மரக்கன்றுகள் ஊன்றப்படுகிறது. மேலும் அதன் இடமும் அடையாளப் படுத்தப்படுகிறது.

**ஆவணப்படுத்தல் :**

நடப்பட்ட மரக்கன்றுகள் ஒவ்வொன்றிற்கும் குறியீட்டு எண் கொடுக்கப்படுகிறது. இக்குறியீட்டு எண்ணில் மரத்தின் எண், மாவட்டம், ஊரின் எண், குழந்தையின் உறுப்பினர் அடையாள எண் ஆகியவற்றுடன் ஒளிப்படம் எடுக்கப்படுகிறது.மேலும் மரம் எங்கு இருக்கிறது என்று அடையாளம் காண அதன் தூரமும் திசையும் குறிப்பிடப்படுகிறது. இவை அனைத்தும் கணிணியில் பதிவு செய்யப்படுகிறது.

**ஆவணம் புதுப்பித்தல் :**

பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஆண்டுதோறும் கண்காணிக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது. ஏற்கனவே நடப்பட்ட மரக்கன்று இறந்து போனாலோ, அழிந்து போனாலோ அதே இடத்தில் அதே எண்ணைக் கொண்ட புதிய மரக்கன்று நடப்பட்டு வளர்க்கப்படும் .

**பொங்கல் விழாவில் பாராட்டுதல் :**

இவ்வாறு நடப்பட்ட மரக்கன்றுகளை நல்லமுறையில் வளர்க்கும் குழந்தைகள் ஆண்டுதோறும் நடக்கவிருக்கும் பொங்கல் விழாவில் பாராட்டப்படுவார்கள்.

350 350 350 350 350 350 350 350


# 350

## உலகம் அழிவதை தடுக்க கடைசி வாய்ப்பு !


நாம் சூரியனிடமிருந்து பல கோடி மைல் தூரத்தில் வாழ்ந்து வருகிறோம். சூரியனிடமிருந்து வரும் ஒளிக்கதிர்கள் பூமியை வந்தடைந்து பசுமை இல்ல வாயுக்கள் உதவியுடன் வெளியே செல்ல வேண்டும். ஆனால் தற்போது **பசுமை இல்ல வாயுக்களின்** அடர்த்தி அதிகமாகிவிட்டது. எனவே வெப்பம் வெளியே செல்ல முடியாமல் பூமியிலேயே தங்கி விடுவதால் பூமி மிகவும் வெப்பமடைந்து வருகிறது. இதனை தடுக்க அனைவரும் தாமதிக்காமல் உடனே செயல்படுவேண்டும்.

பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு என மண்ணினுள் புதைந்து கிடைக்கும் புதைவடிவ எரிபொருட்களை அதிகமாக பயன்படுத்துவதால் அவற்றிலிருந்து கரியமிலவாயு அதிகமாக வெளியாகிறது. மேலும் நெகிழி (பிளாஸ்டிக்) குப்பைகளை எரிப்பதனால் வெளியாகும் புகையினாலும் குளிரூட்டும் இயந்திரகளிலிருந்து வெளியாகும் நச்சு வாயுக்களாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு வாயுக்கள் போன்றவற்றாலும் **பூமியை சுற்றியுள்ள வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி அதிகமாகிறது.** இதனால் புவியின் வெப்பமும் அதிகரித்து கொண்டே செல்கிறது. கடந்த நூற்றாண்டில் சராசரியாக வெப்பநிலை 0.74 டிகிரி செல்சியஸ் அதிகமாகியுள்ளது.

பசுமை இல்ல வாயுக்கள் (வளிமண்டலம்) அடர்த்தியினை அளக்க ppm(part per million) என்ற அலகு பயன்படுத்தப்படுகிறது. அதாவது பத்து இலட்சத்தில் ஒரு பகுதி.




உலகம் அழியாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 350 ppm இருக்க வேண்டும்.




பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 450 ppm க்கு மேல் போனால் பூமியில் எல்லா உயிரினமும் அழிந்துவிடும்.

350 350 350 350 350 350 350 350

350 350 350 350 350 350 350 350

**புவி வெப்பமடைவதனால் ஏற்படும் விளைவு**

- ★ **வெப்பநிலை உயர்வதால் புதிய புதிய நோய்கள் உருவாகின்றன.**
- ★ **துருவப்பகுதிகளில் பனிப்பாறைகள் உருகுவதால் கடல் நீர் மட்டம் உயர்ந்து உலகம் அழிந்து விடும் அபாயம் உள்ளது.**
- ★ **நீர்நிலைகள் வற்றுகின்றன.**
- ★ **புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.**
- ★ **மழை பெய்யும் மாதங்களில் வறட்சி போன்ற காரணங்களினால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் விவசாயமும் பாதிக்கப்படுகிறது, அதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.**

இதனைத் தடுக்க **வளிமண்டலத்தில் 389 அளவாக உயர்ந்துள்ள பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தியை 350 ஆக குறைத்து புவி வெப்பமடைவதை சமாளிப்பதே சிறந்த முடிவாகும்.** இவ்வாறு குறைக்க வேண்டுமெனில் அதற்கு நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றை பயன்படுத்துவதை பெருமளவு குறைக்க வேண்டும். ஒருவேளை கரியமிலவாயு தொடர்ந்து வளிமண்டலத்தில் கலப்பதை கட்டுப்படுத்த தவறினால் உலகம் பேரழிவைச் சந்திக்கும் அபாயம் ஏற்படும்.

புவி வெப்பமடைவதைத் தடுப்பது குறித்து உலக நாடுகளுக்கு இடையேயான கால நிலை குறித்த பேச்சுவார்த்தை ஐ.நா சபை மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகள் பேச்சுவார்த்தையில் உடன்பட மறுக்கின்றன. இதற்கான உலக மாநாடு 07.12.2009 முதல் 18.12.2009 வரை டென்மார்க் நாட்டின் கோபன்எகன் நகரில் நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில் நல்லதொரு உடன்பாடு காணமுடியாது போனால், அதன் விளைவாக இந்த உலகமே அழிந்துபோகும் நிலை ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இது வெறும் எழுத்துகள் மட்டும் அல்ல. இது அறிவியல் உண்மை.

**'இன்றே செயல்படுவோம் புவி வெப்பமடைவதை தடுத்து உலகத்தை காப்போம்'.**

**ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்! புவி வெப்பத்தைத் தடுப்போம்!**
**உலகம் அழிந்து போகாமல் காப்போம்!**


இவண்,

**மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பு, தமிழ்நாடு.**

**மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் (மேக்ட்)**

கதவுஎண்.8, பிளாட்எண்.39, ஸ்டார்லிங் அப்பார்ட்மென்ட்,

அக்பராபாத் இரண்டாம் தெரு, கோடம்பாக்கம்,

சென்னை-600024. தொலைபேசி : 044 - 24721579



*வாழ்த்துகிறோம் !*

**சுமி எண்டர்பிரைசஸ்**

**வண்ணம் மற்றும் உள் அலங்கார வினியோகஸ்தர்**

15/5, எ.ஆர்.வி. வணிக வளாகம், சாஸ்திரி சாலை,

தென்னூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

தொலைபேசி : **0431-2742534,** கைபேசி : **98424 77790**

மின்னஞ்சல் : **sumipaintsassociate@hotmail.com**


350 350 350 350 350 350 350 350